# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 61/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 3 | Caste | : |
| Name | : கருப்பாயி | Calling | : |
| Father / Husband Name | : கருப்பையா | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 05th November 2025.

-----------------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் காரைக்குடி தாலுகா அரண்மனை சிறுவயல் முத்துப்பட்டியில் வசித்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். அ.சா.1 உடையம்மை எனது உறவினர். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1 உடையம்மையின் கணவரான காளைலிங்கத்திற்கு காளையார்கோவிலுக்கு தெற்கே வண்டியில் செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக சாலா என்கிற விசாலாட்சி என்பவர் மாலை சுமார் 05.00 – 05.30 மணியளவில் தகவல் சொன்னார். தகவல் கிடைத்தவுடன் நானும் சாலா என்கிற விசாலாட்சி என்பவரும் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சென்றோம் நாங்கள் செல்வதற்குள் காளைலிங்கத்தை மதுரை ஹானா ஜோசப் மருத்துவமனை அழைத்துச் சென்றுவிட்டார்கள். நாங்கள் மதுரை ஹானா ஜோசப் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். அதன் பிறகு மூன்று மாதங்கள் கழித்து காளைலிங்கம் மதுரை மருத்துவமனையில் சிகிச்சைப் பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு சென்றுப் பார்த்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.11.05 12:40:59 +0530

இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் ஆமாம் அரசு மருத்துவமனையிலும், ஹானா ஜோசப் மருத்துவமனையிலும் வைத்து விசாரணை செய்தார்கள். சம்பவம் குறித்து கேள்விப்பட்ட அன்றே போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். அதன் பிறகு, எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் தேதி தெரியவில்லை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். சம்பவ தினத்தன்றே ஜோசப் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். நான் சொல்வது போல் இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் புகார்தாரர் என் உறவினர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.11.05 12:41:08 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

சிவகங்கை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 61/2022 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 4 | Caste | : |
| Name | : விசாலாட்சி | Calling | : |
| Father / Husband Name | : அழகு | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 05th November 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் திருக்கோஷ்டியூர் சுள்ளங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 உடையம்மை எனது உறவினர். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1 உடையம்மையின் கணவரான காளைலிங்கத்திற்கு காளையார்கோவில் வளச்சேரிப்பட்டி அருகே வண்டியில் செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 மாலை சுமார் 04.00 மணியளவில் தகவல் சொன்னார். தகவல் கிடைத்தவுடன் நான் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சென்றேன் காளைலிங்கத்தை மதுரை ஹானா ஜோசப் மருத்துவமனை அழைத்துச் சென்றார்கள். நாங்கள் மதுரை ஹானா ஜோசப் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். அதன் பிறகு மூன்று மாதங்கள் கழித்து காளைலிங்கம் மதுரை மருத்துவமனையில் சிகிச்சைப் பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு சென்றுப் பார்த்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.11.05 12:41:17 +0530

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் ஆமாம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். அதன் பிறகு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P Digitally signed by SELVAM P Date: 2025.11.05 12:41:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

சிவகங்கை.